# உலகாயத ஆய்வுகளும் இயக்கப் பின்புலங்களும்
# (Global studies and operational backgrounds)

லி. சிவகுமார் | L. Sivakumar[11]

**Abstract:** The paper to evaluate the research works on basis of historical that they were in the field of worldly life like secular. The gradual development of that research works and explained about the Marxist and periyarist movements which are to occur the debate on basis of that thought.

உலகாயதம் என்ற சமயம் பழந்தமிழகத்தில் புகழ்பெற்று விளங்கியது. இச்சமயத்தைப் பூதநெறி என்றும் அழைப்பர். பூதநெறிக்கும் உலகாயதத்திற்கும் சிற்சில வேறுபாடுகள் இருப்பினும் இரண்டையும் ஒரே சமயமாக விளக்குவர். இறைமறுப்பு நெறியான உலகாயதத்தை, அறிஞர்கள் இறைமறுப்பு இயக்கங்களோடு தொடர்புபடுத்தியுள்ளனர். இவ் ஆய்வுகளைத் தொகுத்து ஆராய்வதன் மூலம் உலகாயத ஆய்வுகள் பெற்றுள்ள மாற்றத்தை அறிய வாய்ப்பு ஏற்படுகின்றது. இச்சமயம் பற்றிக் காலந்தோறும் நிகழ்த்தப்பட்ட ஆய்வுகளைத் தொகுத்து ஆயும் இக்கட்டுரை இச்சமயத்திற்கு உரிமைகோரும் அமைப்புகளை இனம்கண்டறிந்து வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொள்கின்றது.

**குறிச்சொற்கள்** : உலகாயத, ஆய்வுகளும், இயக்க, பின்புலம், *Global studies, operational backgrounds*

***Citation:*** சிவகுமார் லி., *(February 2021), "*உலகாயத ஆய்வுகளும் இயக்கப் பின்புலங்களும் *(Global studies and operational backgrounds)", IIETS (Inam: International E-Journal of Tamil Studies) (ISSN:2455-0531), Vol.6, Issue 25, pp.37-15*

***

### *1.1.* வைதீகமும் அவைதீகமும்

தமிழகத்தில் நிகழ்த்தப்பட்டிருக்கும் பெரும்பான்மை மெய்யியல் (தத்துவம்)1 ஆய்வுகள் சிவனிய (சைவ) சமயத்தை அடிப்படையாகக் கொண்டும் மாலிய (வைணவ) சமயத்தை அடிப்படையாகக் கொண்டும் அமைந்துள்ளன. அவற்றுள் தமிழர்களின் மிகச்சிறந்த கண்டுபிடிப்பாகச் சிவனியக் கோண்முடிபு (சைவ சித்தாந்தம்) விளக்கப்படுகின்றது. இவ்விரு சமயத்திற்கு மாற்றாகப் பௌத்தம், சமணம் (சைனம்) ஆகிய சமயங்களின் மெய்யியல் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன. இந்நான்கு சமயங்களுள் சிவனியமும் மாலியமும் வேதத்தை ஏற்றுக்கொள்வதால் வைதீக சமயங்கள் என்றும் பௌத்தமும் சைனமும் வேதத்தை ஏற்றுக்கொள்ளாததால் அவைதீக சமயங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. இந்நான்கு சமயங்கள் தவிர்ந்த பிற வைதீக, அவைதீக சமயங்கள் பற்றிய ஆய்வுகள் பெரும்பாலும் நிகழ்த்தப்படாமலிருந்தன.

மணிமேகலை, நீலகேசி, சிவஞான சித்தியார் முதலான நூல்களில் காணப்படும் பிற சமயங்கள் பற்றி உரையாசிரியர்கள் மட்டுமே எழுதினர். 1950கள் வரை தமிழில் உள்ள மெய்யியல் நூல்கள் பற்றிய பார்வை இத்தன்மை வாய்ந்ததாகவே இருந்தன. இத்தன்மையை மார்க்சியத் தமிழறிஞர்கள் மாற்றியமைத்தனர். உலகாயத நெறியைத் தமிழர்களுக்குக் கண்டறிந்து கொடுக்கும் வேலையை அவர்கள் செய்தனர்.

### *1.2.* உலகாயதம் அறிமுகம்

பழந்தமிழகத்தில் பூதநெறி புகழ்பெற்றுத் திகழ்கிறது. பூதநெறி ஐந்து பூதங்களின் சேர்க்கையால் (நிலம், வான், வளி, தீ, நீர்) உலகம் தோன்றியதை விளக்குகின்றது. இதனைத் தொல்காப்பியம் (1580) வெளிப்படுத்துகின்றது. பூதநெறியிலிருந்து மாறுபட்ட உலகாயதம் நான்கு பூதங்களை அடிப்டையாகக் கொள்கிறது. அளவைநெறியை வளர்த்தெடுத்த உலகாயதம் காட்சி

---

[11] தமிழ் – உதவிப்பேராசிரியர், பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி

அளவையை மட்டும் கொண்டு விளங்குகின்றது (மணிமேகலை 27:78). மணிமேகலை பூதநெறியின் மெய்யியலையும்; (27:264-288) உலகாயதநெறியின் அளவையைப் பிரகற்பதி ஒழுங்குபடுத்தியதையும் குறிப்பிடுகின்றது (27:81). பூதநெறியோடு இணைந்து வளர்ந்த உலகாயம் கடவுளை மறுத்ததோடு மறுபிறப்பு, வினைக்கோட்பாடு முதலான கொள்கைகளையும் மறுத்தது. அதனால் உலகாயதத்தைப் பௌத்தம், சைனம், சிவனியம், மாலியம் முதலான சமயங்களின் அறிஞர்கள் மறுத்தனர். இம்மறுப்பைத் தமிழ் இலக்கியங்கள் பதிவு செய்கின்றன.

சாத்தனார் (மணிமேகலை - கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு), நீலகேசி ஆசிரியர் (நீலகேசி - கி.பி. ஏழாம் நூற்றாண்டு), மாணிக்கவாசகர் (கி.பி. எட்டாம் நூற்றாண்டு) (சோ.ந. கந்தசாமி (சோ.ந.க.) 2003:34), வேதாந்த தேசிகர் (13ஆம் நூற்றாண்டு) (சோ.ந.க. 2003:68-69), பின்பழகிய ஜீயர் (13ஆம் நூற்றாண்டு) (கி. முப்பால்மணி 2013:247), வடக்கு திருவீதிப் பிள்ளை (13ஆம் நூற்றாண்டு) (கி. முப்பால்மணி 2013:247), பரிமேலழகர் (13ஆம் நூற்றாண்டு) (சோ.ந.க. 2003:70-71), மெய்கண்ட சிவம் (13ஆம் நூற்றாண்டு) (சோ.ந.க. 2003:73-83), அருணந்தி சிவம் (13ஆம் நூற்றாண்டு) (சோ.ந.க. 2003:83-86), உமாபதிசிவம் (14ஆம் நூற்றாண்டு) (சோ.ந.க. 2003:89-90), தத்துவ பிரகாசர் (14ஆம் நூற்றாண்டு) (சோ.ந.க. 2003:35, 91-93), சிவஞான முனிவர் (18ஆம் நூற்றாண்டு) (சோ.ந.க. 2003:87-88) முதலான சமய அறிஞர்கள் உலகாயதத்தை மறுத்து தங்கள் நூல்களில் எழுதினர். இவ் அறிஞர்களின் நூல்கள் தமிழகத்தில் தொடர்ந்து உலகாயதம் உயிர்ப்போடு இருந்ததை வெளிப்படுத்துகின்றது. எனினும் உலகாயத நூல்கள் தமிழில் கிடைக்கவில்லை. இச்சமய நூல்கள் அழிக்கப்பட்டிருக்க வேண்டும்.

சித்தர்கள் தோன்றத் தொடங்கிய காலத்தில் இருந்து உலகாயத சமயம் மீண்டும் மறுமலரச்சி எய்தத் தொடங்கியது.2 சித்தர்களைத் தொடர்ந்து பத்தொன்பதாம் நூற்றாண்டில் உலகாயதர்கள் சுயக்கியானிகள் என்ற பெயரில் எழுச்சியுற்றனர் (வீ. அரசு 2012ஆ:293). சுயக்கியானிகளிடமிருந்து உலகாயதர்களின் புதிய வரலாறு தொடங்குகின்றது. அவர்கள் சிவனியம், மாலியம் முதலான சமயத்தவர்களை மறுத்து நூல்கள் எழுதத் தொடங்கினர். அவர்களிடமிருந்து உலகாயத சமயத்தவர்களின் நூல்கள் கிடைக்கத் தொடங்குகின்றன. இந்நீண்ட வரலாற்றை மறந்த தமிழ்ச்சமூகம் இருபதாம் நூற்றாண்டில் உலகாயதம் பற்றிய ஆய்வுகளைத் தொடங்கியது. இவ் ஆய்வுகள் உலகாயத சமயத்தை இயக்கப் பின்புலத்தில் ஆராய்ந்தன. அவற்றுள் மார்க்சிய ஆய்வுகள் முன்னணியில் நிற்கின்றன.

**1.3. மார்க்சிய ஆய்வுகள்**

பொருள் (மெட்டீரியல்) முதலில் தோன்றியதா அல்லது கருத்து (ஐடியல்) முதலில் தோன்றியதா என்பதை அடிப்படையாகக் கொண்டு மார்க்சியம் உலகில் தோன்றிய மெய்யியல்களை மெட்டீரியலிசம், ஐடியலிசம் என்று இரண்டாகப் பகுக்கின்றது. இவ்வடிப்படையைப் பின்பற்றி உலகில் தோன்றிய பல்வேறு சமயங்களின் மெய்யியலை மார்க்சியம் ஆராய்கின்றது. மெட்டீரியலிசத்தைத் தமிழில் மொழிபெயர்த்த அறிஞர்கள் பொருள்முதல்வாதம் என்றும் ஐடியலிசத்தைக் கருத்துமுதல்வாதம் என்றும் மொழிபெயர்த்தனர்.

இந்தியாவில் தோன்றிய மெய்யியல்களை ஆராய்ந்த மார்க்சியச் சிந்தனையாளர்கள் உலகாயதம் பொருள்முதல்வாதப் பிரிவைச் சேர்ந்தது என்பதை வலியுறுத்தினர். இதனை விரிவுபடுத்தி எழுத எண்ணிய தேவிபிரசாத் சட்டோபாத்யாயா 1959ஆம் ஆண்டு லோகாயதா - எ ஸ்டடி இன் ஏன்சியன்ட் இந்தியன் மெட்டீரியலிசம் என்ற நூலை எழுதினார். இந்நூலில் உலகாயதத்தில் அமைந்துள்ள பொருள்முதல்வாதப் பண்;புகளை வெளிப்படுத்தினார். இந்நூல் வெளிவந்த பிறகு மார்க்சியர்கள் இந்திய மெய்யியலில் பொருள்முதல்வாதத்தின் முன்னோடியாக உலகாயதத்தைக் கருதினர்.

தமிழக மார்க்சியர்கள் ஆங்கிலத்தில் இருந்த பல மார்க்சிய நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துக் கொண்டிருந்தனர். அவர்களுள் ஒருவரான ஆர்.கே. கண்ணன் 1959ஆம் ஆண்டு ஜார்ஜ் பொலிட்ஸர் எழுதிய நூலைத் தமிழில் மார்க்ஸீய மெய்ஞ்ஞானம் என்ற பெயரில் மொழிபெயர்த்தார். இந்நூலில் மார்க்சிய மெய்யியலான மெட்டீரியலிசத்தை அவர் லோகாயதவாதம் என்று மொழிபெயர்த்தார் (2004:9). உலகாயதவாதம் என்ற சொல்லின் வடமொழிப் பெயர்ப்பு லோகாயதவாதம் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்நூலைத் தொடர்ந்து ராகுல சாங்கிருத்யாயன் எழுதிய மார்க்சிய நூலை ஏ.ஜி. எத்திராஜுலு விஞ்ஞான லோகாயதவாதம் என்று 1985இல் மொழிபெயர்த்தார்.



Inam:International E_Journal of Tamil Studies UAN.TN03D0061112 ISSN : 2455-0531
February 2021, Vol.6 Issue:25 www.inamtamil.com

மார்க்சிய மெய்யியலை உலகாயதநெறியுடன் இணைத்த இம்மொழிபெயர்ப்புகள் மாரக்சியத்தையும் உலகாயதநெறியையும் வேறுபடுத்த முடியாத வகையில் இணைத்தன. ஆனால், தமிழில் உலகாயத வேர்களைத் தேடவில்லை. இத்தேடலை நா. வானமாமலை மேற்கொண்டார். அவர் 1973ஆம் ஆண்டு தமிழர் பண்பாடும் தத்துவமும் என்ற நூலை வெளியிட்டார். இந்நூலில் பழந்தமிழ் இலக்கியத்தில் பொருள் முதல்வாதக் கருத்துகள், பரபக்க லோகாயதம் என்ற இரண்டு கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இக்கட்டுரைகள் பழந்தமிழ் (சங்க) இலக்கியங்களில் அமைந்துள்ள உலகாயதக் கருத்துகளையும் மணிமேகலை, நீலகேசி, சிவஞான சித்தியாரில் உள்ள உலகாயதக் கருத்துகளையும் அறிவியல் ஆய்வுகளோடு இணைத்து விளக்கின. இவ் ஆய்வு பழந்தமிழச் சமூகத்தில் இருந்து சிவஞானசித்தியார் வரை உலகாயதம் தொடர்ந்து இருந்து வந்ததை வெளிப்படுத்தியது. மேலும், உலகாயத ஆய்வைத் தமிழிலக்கிய ஆய்வோடு இணைத்தது (2008:134-192).

வேதமறுப்பு நெறியான (வைதீக சமயமான) உலகாயதம் பழந்தமிழகத்தில் புகழ்பெற்றிருந்ததை நா. வானமாமலையின் ஆய்வுகள வெளிப்படுத்தின. இதனைக் குணா வளர்த்தெடுத்தார். குணா 1980இல் தமிழர் மெய்யியல் என்ற நூலை வெளியிட்டார். இந்நூலில் உலகாயத மெய்யியலை உலகாய்தம் என்று விளக்கும் அவர், “உலகாய்தம் ‘உலகினை ஆய்கின்ற முறை’ எனப் பொருள்படும். அஃது ஒருவகை இயற்கையியலே ஆகும். அது தொடக்ககாலப் பொருள் முதலியல்” (1980:68-69) என்று குறிப்பிடுகின்றார். இங்கு உலகாய்தம3; என்ற சொல்லுக்கு ‘உலகினை ஆய்கின்ற முறை’ என்று பொருள் விளக்கம் தருகின்றார். இதன் மூலம் உலகாயத சமயத்தைத் தமிழக மெய்யியலாக அவர் அடையாளப்படுத்துகின்றார். அவரைத் தொடர்ந்து அருணன் (தமிழரின் தத்துவ மரபு 2010), தேவ. பேரின்பன் (தமிழர் தத்துவம் 2006, தமிழர் வளர்த்த தத்துவங்கள் 2014) முதலான மார்க்சிய அறிஞர்கள் உலகாயதத்தை ஆய்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**1.4. உலகாயத ஆய்வுகளும் பெரியாரியமும்**

பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகளை உலகாயத மரபின் தொடர்ச்சியாக வரலாற்று நோக்கில் விளக்கியவர் க. நெடுஞ்செழியன் ஆவார். அவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தாம் செய்த முனைவர் பட்ட ஆய்வை 1990ஆம் ஆண்டு தமிழ் இலக்கியத்தில் உலகாய்தம் என்ற பெயரில் நூலாக வெளியிட்டார். இந்நூலில் உலகாயத மரபோடு தந்திரம், கபாலிகம், அய்ந்திரம், ஆசீவகம் முதலான மரபுகளை விளக்குவதோடு, “பல்வேறு தடைகளுக்கும் மறுப்புகளுக்கும் உட்பட்டிருந்த உலகாய்தம் இருபதாம் நூற்றாண்டில் பதிய திருப்பத்தைக் கண்டது. பகுத்தறிவையும் சமூக ஒப்புரவையும் அடிப்படையாகக் கொண்ட புரட்சி இயக்கமாகவும் மக்கள் இயக்கமாகவும் அது வடிவம் கொண்டது. இப்பதிய போக்கினை உருவாக்கியவர் பெரியார் ஈ.வெ. இராமசாமி ஆவார்” என்று குறிப்பிடுகின்றார். இங்கு, உலகாயதத்தின் தொடர்ச்சியாகப் பெரியாரியத்தை அவர் விளக்குகின்றார்.

1990களில் மார்க்சியம் கடும் நெருக்கடியைச் சந்தித்த சூழலில் உலகாயத ஆய்வுகள் மார்க்சிய தளத்திலிருந்து பெரியாரிய தளத்திற்கு நகர்வது குறிப்பிடத்தக்கது. இம்மரபைச் சோ.ந. கந்தசாமியும் ஆதரித்தார். அவர் 2003ஆம் ஆண்டு வெளியிட்ட இந்தியத் தத்துவக் களஞ்சியம் முதல் தொகுதியில், “அண்ணல் அம்பேத்கர் புத்தரின் போதனைகளைப் பயின்று இக்காலத்தவர்க்கும் பௌத்தநெறி பயன்நல்கும் பாங்கினைத் தெளிந்து புதிய விளக்கங்களுடன் ‘Neo-Buddhism’ எனச் சொல்லத்தக்க புதிய பௌத்தநெறியைக் கண்டு சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டாரையும் தாழ்த்தப்பட்டாரையும் அவர் நெறியில் சேரச்செய்தனர். அவரைப்போலவே பெரியார் ஈ.வெ.ரா. உலகாய்தநெறியைப் புதுப்பித்துக் காலத்திற்கு ஏற்ற கருத்துகளையும் சேர்த்து உருவாக்கிய சுயமரியாதை நெறியைப் புதிய உலகாயதம் (Neo-Materialism) என்ற பெயரினால் கூறுதல் முற்றிலும் பொருந்தும்” (2016:96) என்று விளக்குகின்றார். நவயான பௌத்தத்தையும் புதிய உலகாயதத்தையும் இணைத்து விளக்கும் சோ.ந. கந்தசாமியின் இவ்விளக்கம் தமிழக வரலாற்றுச் சூழலில் அயோத்திதாசருக்கும் பெரியாருக்கும் உள்ள மெய்யியல் முரண்பாடுகளைக் காட்டுவதாக அமைகின்றது.

பெரியாருக்கு முந்தைய காலத்தில் வாழ்ந்த அயோத்திதாசர் பண்டைய பௌத்த நிலையைக் கண்டறிந்து பூர்வ பௌத்தம் என்ற பெயரில் குறிப்பிட்டார். அதைப்போல பெரியார் பழைய உலகாயத மரபைப் புதிய முறையில் விளக்கினார் என்று குறிப்பிடுவது பொருத்தமாக

அமைகின்றது. பெரியார் தான் பேசிய மெய்யியலைப் பிரகிருதிவாதம் அல்லது மெட்டீரியலிசம் (வே. ஆனைமுத்து 1974:1049) என்று விளக்குகின்றார். இந்த பிரகிருதிவாதத்தை உலகாயதம் என்று சோ.ந. கந்தசாமி (2016:27-28) குறிப்பிடுகின்றார். இதன்மூலம் சோ.ந. கந்தசாமி பெரியாரியத்தின் பழைய வரலாற்றை உருவாக்குகின்றார். இவ்வரலாறு பெரியாரியத்தைப் பௌத்தத்தோடு தொடர்புபடுத்தும் ந. முத்துமோகன் (2016:434-444) முதலான அறிஞர்களின் பார்வையிலிருந்து மாறுபடுகின்றது. இந்திய தத்துவ மரபில் பெரியாரியம் என்ற நூலில் வெளியிடப்பட்ட தம் கட்டுரையில் பெரியாரின் உலகாயதச் சிந்தனைகளைச் சோ.ந. கந்தசாமி வளர்த்தெடுக்கின்றார். அவர் பழைய உலகாயத சிந்தனை மரபைப் பெரியாரின் புதிய உலகாயதம் எப்படி வளர்த்தெடுத்தது என்று விளக்குகின்றார் (இரா. அறவேந்தன் & மூ. அய்யனார் 2014:18-42).

### 1.5. மொழிபெயர்ப்பு நூல்களும் உலகாயதமும்

மார்க்சிய பெரியாரிய ஆய்வுகள் மட்டுமன்றி ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட நூல்களும் உலகாயதச் சிந்தனைகளை வெளிப்படுத்தின. தமிழகத்தில் 1940களுக்குப் பிறகு தமிழுக்கும் சமற்கிருதத்திற்கும் இடையே கடுமையான வெறுப்புணர்ச்சி தோன்றியது. அதனால் சமற்கிருதத்தில் உள்ள மெய்யியல் சிந்தனைகள் தமிழுக்கும் தமிழர்க்கும் எதிரானது என்ற சிந்தனை வளர்த்தெடுக்கப்பட்டது. அதனால் சமற்கிருத, பிராகிருத, பாலி நூல்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நூல்கள் தமிழகத்தில் செல்வாக்கு இழந்தன. அதனால் ஆங்கிலத்தில் தோன்றிய இது போன்ற நூல்கள் தமிழில் தோன்றவில்லை. ஆங்கிலத்தில் மெய்யியல் பற்றிச் சிறப்பாக எழுதிய எஸ்.என். தாஸ்குப்தா முதலான அறிஞர்களின் நூல்களும் தமிழில் மொழிபெயர்க்கப்படவில்லை.

எஸ். இராதாகிருஷ்ணன், ஹரியண்ணா ஆகியோர் எழுதிய நூல்களில் சில தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. பின்னர் மார்க்சிய அறிஞர்களின் முயற்சியால் தேவி பிரசாத் சட்டோபாத்யாயா, ராகுல் சாங்கிருத்யாயன் முதலான மார்க்சிய அறிஞர்களின் மெய்யியல் நூல்கள் மட்டும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. 2010ஆம் ஆண்டு வெளிவந்த தேவி பிரசாத் சட்டோபாத்யாயாவின் உலகாயதம் : பண்டைக்கால இந்தியப் பொருள்முதல்வாதம் பற்றிய ஆய்வு என்ற மொழிபெயர்ப்பு நூல் உலகாயதம் பற்றிய சிறந்த நூலாக அமைகின்றது.

வடமொழியில் எழுதப்பட்ட நூல்களைக் கற்று ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நூல்களை மையமாகக் கொண்டு கி. லெட்சுமணன் இந்திய தத்துவ ஞானம் என்ற நூலை எழுதினார். இந்நூலில் உலகாயதநெறியினர் காட்சியளவையை அடிப்படையாகக் கொண்டு உலகத்தை ஆயும் முறையையும் பொருட்களின் இயல்பை சுட்டும் சுபாவ வாதத்தையும் விளக்குகின்றார் (1980:77-85). இவ்விளக்கம் உலகாயதம் பற்றிய பொதுவான அறிமுகமாக அமைவதோடு வடமொழியிலுள்ள உலகாயதக் கருத்துகளை வெளிப்படுத்துவதாகவும் அமைகின்றது.

### 1.6. லௌகீக சங்க ஆய்வுகள்

குடியேற்ற காலத்தில் நடைபெற்ற மெய்யியல் உரையாடல்களில் உலகாயதநெறியைச் சேர்ந்தவர்களின் பங்களிப்புப் பற்றி நீண்ட காலமாக வெளி உலகுக்குத் தெரியாமல் இருந்தது. சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் வீ. அரசு முயற்சி செய்து சென்னை இலௌகிக சங்கம் பற்றிய செய்திகளை வெளிக்கொண்டு வந்துள்ளார். அவர் சென்னை இலௌகிக சங்கம் என்ற பெயரில் கொண்டுவந்த ஆறு தொகுதிகள் காலனியக் காலத்தில் (Colonial Peried) உலகாயத நெறியைச் சேர்ந்தவர்கள் பெற்றிருந்த ஏற்றத்தை விளக்குகின்றது.

உலகாயத நெறியினர் 1878ஆம் ஆண்டு ‘இந்து சுயக்கியானிகள் சங்கம் (Hindu Free Thought Union) என்ற அமைப்பைத் தொடங்கினர். இவ் அமைப்பு 1886ஆம் ஆண்டு ‘சென்னை இலௌகிக சங்கம்’ (Madras Secular Society) என்று பெயர்மாற்றம் செய்யப்பட்டது. அவர்கள் 1878 முதல் 1882 வரை தத்துவ விசாரிணி என்ற இதழையும் 1882 முதல் 1888 வரை தத்துவ விவேசினி என்ற இதழையும் The Thinker என்ற ஆங்கில இதழையும் நடத்தினர். இங்கு, இந்து என்னும் சொல் ஐரோப்பியர் அல்லாத காலனியக் கால இந்தியர்களைக் குறிக்கின்றது (வீ. அரசு 2012அ:32). தற்காலத்தைப் போல ஒரு குறிப்பிட்ட சமயத்தவரைக் குறிக்கவில்லை.

சுய சிந்தனையாளர்கள் என்று பொருள்படும் வகையில் தங்களைச் சுயக்கியானிகள் என்று அழைத்துக் கொண்ட உலகாயதர்கள் தங்களின் வரலாற்றை, “பூர்வத்தில் உலகாயுதமென்னுமோர் மதமிருந்ததாகவும் அஃதே பிற்காலத்தில் நாஸ்திகமானதென்றும் அதுவே இப்போது

சுயக்ஞானமென்று வழங்குவதாகவும் இம்மூன்றனுட் சிற்சில பேதமிருப்பினும் மேற்படி மூன்றுமொன்றே யெனவும்" (வீ. அரசு 2012ஆ:293) என்று பதிவுசெய்கின்றனர். இதன்மூலம் தங்களுக்களின் பழைய வரலாற்றை மீட்டெடுத்துக் கொள்கின்றனர்.

சுயக்கியானிகள் என்று தங்களை அழைத்துக்கொண்டதோடு தத்துவ விவேசினி இதழில் 'ஆங்கிலோ திராவிட சுயக்கியான பத்திரிகை' என்றும் பதிவுசெய்த உலகாயதர்கள் அதற்கான காரணத்தையும் குறிப்பிடுகின்றனர். "தனது சுயானுபவத்தையொட்டி உதிக்கும் கியானம் சுயக்கியானம் என்னப்படும்" (வீ. அரசு 2012ஆ:50) என்று விளக்கும் அவர்கள் "ஒருவர் கற்பிப்பதினால் வந்த ஞானம் சுயக்கியானம் ஆகுமா?" என்ற கேள்வியை எழுப்பி, "ஒருவர் கற்பித்ததனால் வந்த ஞானமே ஆயினும், அது ஒருவனுடைய சுயானுபவத்தை ஒட்டியிருப்பின், அது சுயக்கியானமே ஆகும்" (வீ. அரசு 2012ஆ:50) என்ற பதிலைத் தருகின்றனர். இதன்மூலம் சுய அறிவையும் சுய அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டு விளங்குபவர்கள் சுயக்கியானிகள் என்பது தெளிவாகின்றது.

கி. முப்பால்மணி 2013ஆம் ஆண்டு தமிழகத் தத்துவம் உலகாயதம் என்ற நூலை வெளியிட்டார். இந்நூலில் குடியேற்றக் காலத்தில் சுயக்கியானிகள் என்னும் உலகாய்தர்கள் பிற சமயத்தினரோடு நடத்திய மெய்யியல் உரையாடல்களைப் பதிவு செய்கின்றார். இந்நூலில் சுயக்கியானிகளின் தொடர்ச்சியாகப் பெரியாரை அவர் (2013:304-318) குறிப்பிடவில்லை. ஆனால் வீ. அரசு சுயக்கியானிகளின் தொடர்ச்சியாகப் பெரியாரைக் குறிப்பிடுகின்றார் (2012அ:38). அம்பேத்கர் உருவாக்கிய நவயான பௌத்தத்தின் பழைய வரலாறாக அயோத்திதாசர் உருவாக்கிய பூர்வபௌத்தம் அல்லது தமிழ்பௌத்தம் அமைகின்றது. அதைப்போல பெரியாரிய இயக்கத்தின் பழைய வரலாறாக இந்து சுயாக்கியானிகள் சங்கம் அல்லது சென்னை லௌகீக சங்கம் அமைகின்றது. அயோத்திதாசரின் தமிழ்பௌத்தம் பற்றிய ஆய்வுகள் முன்னுக்கு வந்துள்ளதைப் போன்று சுயாக்கியானிகள் சங்கத்தையும் ஆராய வேண்டியது அவசியமாகின்றது.

உலகாயதம் தமிழக மெய்யியலாக வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொல்காப்பியம் பற்றிய ஆய்வுகளும் புலப்படுத்துகின்றன. தொல்காப்பியத்தில் மெய்ப்பொருள் சிந்தனைகள்4 என்னும் கட்டுரை ஆசீவகம், சமணம் (சைனம்) ஆகிய சமயங்களின் மெய்யியலையும் உலகாயத மெய்யியலையும் ஒப்பிட்டு ஆராய்ந்து தொல்காப்பியத்தில் காணப்படும் மெய்யியல் உலகாயதம் என்று முடிவுரைக்கின்றது. மேலும், பூதபுராணம் முதலான நூல்கள் பழந்தமிழ்ச் சமூகத்தில் இருந்துள்ளன. இந்நூல்கள் உலகாயத நூல்களாக இருப்பதற்கும் வாய்ப்புகள் உள்ளன. எனவே பௌத்தம், சைனம், சிவனியம், மாலியம் முதலான சமயங்களைப் போன்று உலகாயதத்திற்கும் ஒரு பழைய வரலாறு தமிழகத்தில் இருந்திருப்பது வெளிப்படுகின்றது. இவ் ஆய்வுகளை வளர்த்தெடுப்பதன் மூலம் அவ்வரலாற்றை மீட்டெடுக்க முடியும்.

### 1.7. தொகுப்புரை

உலகாயதம் பழந்தமிழ்க் காலத்தில் இருந்து தொடர்ச்சியாக உயிர்ப்புடன் இருந்து வந்துள்ளது. எனினும் அவர்களின் நூல்கள் கிடைக்கவில்லை. இந்நிலையில் உலோகாயதச் சித்தர் முதலானவர்கள் தோன்றத் தொடங்கினர். அவர்களின் தொடரச்சியாகச் சுயக்கியானிகள் சங்கம் 1878ஆம் ஆண்டு உருவாகியது. உலகாயதநெறியை வளர்த்தெடுத்தது. இந்நீண்ட வரலாற்றை தமிழ்ச் சமூகம் மறந்தநிலையில் இருபதாம் நூற்றாண்டில் தமிழில் உலகாயத ஆய்வுகள் தோன்றத் தொடங்கின. உலகாயத ஆய்வுகள் முதலில் மார்க்சியப் பின்புலத்திலும் பின்னர் பெரியாரியப் பின்புலத்திலும் நிகழ்த்தப்பட்டன. சுயக்கியானிகள் சங்கம் கண்டறியப்பட்டதற்குப் பிறகு உலகாயதம் தமிழக மெய்யியலாக ஏற்கப்பட்டு தனித்து ஆய்வு செய்யக்கூடிய நிலையை அடைந்தது.

### சான்றெண் விளக்கம்

1. தத்துவம் என்ற சொல்லுக்கு வடமொழியில் அதன் தன்மை என்று பொருள். ஆனால் தமிழில் இச்சொல்லுக்கு இணையாக வழங்கும் மெய்யியல் என்ற சொல் ஒவ்வொரு சமயமும் உண்மை என்று விளக்கும் மையத்தை விளக்குகின்றது. வைதீகம் வேதத்தையும் சைனம்

நவபதார்த்தம் என்னும் 9 பொருட்களையும் சர்வாத்திவாத பௌத்தம் 12 சார்புகளையும் கொண்டு விளங்குகின்றன.

2. சித்தர் இலக்கியங்களில் உலகாயதச் சிந்தனைகள் காணப்படுவதை நா. வானமாமலை (2008:160) முதலான அறிஞர்கள் புலப்படுத்துகின்றனர். ஆனால் த. கோவேந்தன் பதிப்பித்த சித்தர் பாடல்கள் தொகுதியில் உலோகாயதச் சித்தர் பாடல்கள் காணப்படுகின்றன. இதனைக் குணா எடுத்துக்காட்டுகின்றார் (1980:72). த. கோவேந்தன் தொகுத்த இந்நூலில் மட்டுமே உலோகாயதச் சித்தர் பாடல்கள் காணப்படுவதைப் பெ. மாதையன் (உங்கள் நூலகம், ஜுலை 2011 இதழ், ப. 70) சுட்டிக்காட்டுகின்றார். ஆனந்தராசா திருமா என்பவர் இச்சித்தர் பாடல்கள் போலி என்றும் இதனை இயற்றியவர் த. கோவேந்தன் என்றும் கூகுள் குரூப்சில் 19.07.2010 அன்று பதிவு செய்துள்ளார்.

3. உலகாயதம் என்ற மெய்யியலை உலகாய்தம் என்று குணா, க. நெடுஞ்செழியன் ஆகியோர் குறிப்பிடுகின்றனர். மணிமேகலை முதலான இலக்கியங்கள் உலகாயதம் என்ற சொல்லையே பயன்படுத்தியுள்ளன. உலகாய்தம் என்ற சொல்லை உலகு + ஆய்தம் என்று பிரித்து உலகினை ஆய்கின்ற முறை என்று குணாவும் (1980:68-69) உலகைப் பற்றிய ஆராய்ச்சி என்று க. நெடுஞ்செழியனும் குறிப்பிடுகின்றனர். பண்டைத் தமிழ் மரபை உணர்ந்து ஆயதம் என்ற சொல்லுக்கு விளக்கம் காண முயல்வது அவசியம். மேலும் ஆய்தம் என்ற சொல்லுக்கு ஆராய்ச்சி, ஆய்கின்ற முறை என்ற பொருள் இல்லை என்று பாரதிதாசன் பல்கலைக்கழகத் தமிழியல்துறைப் பேராசிரயர் பா. மதிவாணன் அவர்கள் என்னுடன் உரையாடியபொழுது தெரிவித்தார்கள்.

4. தொல்காப்பியத்தில் மெய்ப்பொருளியல் சிந்தனைகள் என்னும் கட்டுரை நான் (லி. சிவகுமார்) எழுதியது. இது பாரதிதாசன் பல்கலைக்கழகத் தமிழியல்துறை நடத்திய புதன் வட்டக் கருத்தரங்கில் 14.09.2016 அன்று வாசிக்கப்பட்ட அச்சேறாத கட்டுரை.

<u>பின்னிணைப்பு</u>

**உலகாயத ஆய்வுகள் - காலஅடைவு**

**I. மார்க்சிய மெய்யியலை உலகாயதம் என்று மொழிபெயர்த்த நூல்கள்**

1.ஜார்ஜ் பொலிட்ஸர். 1959. மார்க்சிய மெய்ஞ்ஞானம், ஆர்.கே. கண்ணன் (மொ.ஆ.), சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்

2.ராகுல சாங்கிருத்தியாயன். 1985. விஞ்ஞான லோகாயதவாதம், ஏ.ஜி. எத்திராஜுலு (மொ.ஆ.), சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்

**II. மெய்யியல் பற்றிய பொது ஆய்வுகளில் உலகாயதப் பதிவுகள்**

1.கனகசபை வி. 1956. 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம், சென்னை : கழக வெளியீடு.

2.லட்சுமணன் கி. 1960. இந்திய தத்துவ ஞானம், சென்னை : பழனியப்பா பிரதர்ஸ்.

3.ஹரியண்ணா எம். 1966. இந்தியத் தத்துவம் - 1 & 2, தேவ சேனாபதி வ.ஆ. (மொ.ஆ.), சண்முக சுந்தரம் (மொ.ஆ.), சென்னை : தமிழ் வெளியீட்டுக் கழகம்.

4.பெரியார் ராமசாமி ஈ.வெ. 1970. பிரகிருதிவாதம் அல்லது மெட்டீரியலிசம், சென்னை : பெரியார் சுயமரியாதை பிரசுர நிறுவனம் (மூன்றாம் பதிப்பு).

5.வானமாமலை நா. 1972. பண்டைய வேத தத்துவங்கள், சென்னை : மக்கள் வெளியீட்டகம்.

6.வானமாமலை நா. 1973. தமிழர் பண்பாடும் தத்துவமும், சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்

7.வானமாமலை நா. 1976. வேத தத்துவங்களும் வேத மறுப்பு பௌத்தமும், சன்னை : மக்கள் வெளியீட்டகம்.

8.குணா. 1980. தமிழர் மெய்யியல், சென்னை : பொதுமை வெளியீடு.

9.மன்சூர் பி.மு. 2002. நீலகேசியில் சமயக் கோட்பாடுகள், சென்னை : தி பார்க்கர்

10கந்தசாமி சோ.ந. 2003. இந்தியத் தத்துவக் களஞ்சியம், சிதம்பரம் : மெய்யப்பன் பதிப்பகம்.

11.பேரின்பன் தேவ. 2006. தமிழர் தத்துவம், சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்

12.தேவிபிரசாத் சட்டோபாத்யாயா. 2007. இந்தியத் தத்துவ இயல் ஓர் எளிய அறிமுகம், வி.என். ராகவன் (மொ.ஆ.), சென்னை : அலைகள் வெளியீட்டகம்.

13.சக்ரவர்த்தி அ. 2009. நீலகேசி (உரைநடை), கே.என். ராமச்சந்திரன் (மொ.ஆ.), சென்னை : நல்லறப் பதிப்பகம்.

*14.அருணன். 2010. தமிழரின் தத்துவ மரபு, மதுரை : வசந்தம் வெளியீட்டகம்.*
*15.மிருணாள் காந்தி கங்கோபாத்யாயா. 2011. இந்தியாவில் மெய்யியல், சா. ஜெயராஜ் (மொ.ஆ.), சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்*
*16.கோவிந்தசாமி வெ. (ப.ஆ.), 2012. இந்தியத் தத்துவ மரபு சில பார்வைகள் (மார்க்சிய ஒளிக் கட்டுரைகள் - 3), சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்*
*17.தோதாத்ரி எஸ். 2012. இந்தியத் தத்துவம், சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்*
*18.பேரின்பன் தேவ. 2014. தமிழர் வளர்த்த தத்துவங்கள், சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்*
*19.அமுல் சோபியா பா. 2014. இந்திய மெய்யியல் பள்ளிகள், சென்னை : இராசகுணா பதிப்பகம்.*
*20.அறவேந்தன் இரா. (ப.ஆ.) & அய்யனார் மூ. (ப.ஆ.), 2014. இந்தியத் தத்துவ மரபில் பெரியாரியம், திருச்சிராப்பள்ளி : பாரதிதாசன் பல்கலைக்கழகம்.*
*21.சீனிவாசன் இரா. (ப.ஆ.) & காமராசன் க. (ப.ஆ.), 2015. மணிமேகலையில் சமயமும் மெய்யியலும், சென்னை : மெத்தா பதிப்பகம்.*
*22.முத்துமோகன் ந. 2016. இந்தியத் தத்துவங்களும் தமிழின் தடங்களும், சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்*
*23.வரதராஜன் கே. (ஆ.இ.) இந்திய தத்துவ தரிசனம், சென்னை : பாரதி புத்தகாலயம்*
*24.கந்தசாமி சோ.ந. (ஆ.இ.) தமிழ் இலக்கியத்தில் அறிவாராய்ச்சியியல், சிதம்பரம் : மணிவாசகர் பதிப்பகம்.*

***III. உலகாயதம் பற்றிய தனித்த ஆய்வுகள்***

*1.நெடுஞ்செழியன் க. 1990. தமிழ் இலக்கியத்தில் உலகாய்தம், திருச்சிராப்பள்ளி : மனிதம் பதிப்பகம்.*
*2.பார்த்தசாரதி ஆர். 2008. உலகாயதம், சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்*
*3.தேவிபிரசாத் சட்டோபாத்யாயா. 2010. உலகாயதம் : பண்டைக்கால இந்தியப் பொருள்முதல்வாதம் பற்றிய ஆய்வு, எஸ். தோதாத்ரி (மொ.ஆ.), சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்*
*4.அரசு வீ. (ப.ஆ.), 2012. சென்னை இலௌகிக சங்கம் (1878-1888) தத்துவவிவேசினி - THE THIKER இதழ்கள் வழிப்பதிவுகள், தொகுதி - 1, சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்*
*5.அரசு வீ. (ப.ஆ.), 2012. தத்துவம் - கடவுள் - நாத்திகம் சென்னை இலௌகிக சங்கம் - தத்துவவிவேசினி இதழ்க் கட்டுரைகள், தொகுதி - 2, சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்*
*6.அரசு வீ. (ப.ஆ.), 2012. சாதி - பெண்கள் - சமயம் சென்னை இலௌகிக சங்கம் தத்துவவிவேசினி இதழ்க் கட்டுரைகள், தொகுதி - 3, சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்*
*7.அரசு வீ. (ப.ஆ.), 2012. காலனியம் - விஞ்ஞானம் - மூடநம்பிக்கை சென்னை இலௌகிக சங்கம் தத்துவவிவேசினி இதழ்க் கட்டுரைகள் தொகுதி - 4, சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்*
*8. முப்பால்மணி கி. 2013. தமிழகத் தத்துவம் உலகாயதம், சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்*
*9. முப்பால்மணி கி. 2020. தமிழக மெய்யியலில் உலகாயதம், சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்*